RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 296 | அக்டோபர்.27 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## 'பைசன்' பார்க்க நேரம் இருக்கிறது; விவசாயிகளை பார்க்க நேரமில்லையா? முதல்வருக்கு இபிஎஸ் கேள்வி

சென்னை, அக்.27-

ஜெய்பீம் முதல் கூலி, பைசன் வரை, சினிமாக்களைப் பார்க்க, ரசிக்க, கருத்து தெரிவிக்க தான் இன்றைய முதல்வருக்கு நேரம் இருக்கிறது. விவசாயிகளை, ஏழை எளிய மக்களைப் பார்க்க, அவர்களின் வேதனைகளைக் கேட்டறிய நேரம் இருக்காது என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'நாற்று நட்ட கைகளில், மழையில் நனைந்து முளைத்திருந்த நெல்லைப் பிடித்த போது, விவசாயிகளின் விவரிக்க முடியாத வேதனையை உணர்ந்தேன். ஆனால், இந்த நெல்லைப் பிடித்திருக்க வேண்டிய முதல்வர் ஸ்டாலினின் கை, படக்குழுவினரின் கைகளைப் பற்றிக் கொண்டிருக்கிறது. திரைப்படங்களை பார்ப்பதிலோ, திறமையான திரைப்பட குழுவினரை பாராட்டுவதிலோ எந்த தவறும் இல்லை.

ஆனால் தான் எதற்கு முதல்வர் ஆனோம்? என்பதையே மறந்துவிட்டு, முழுநேர சினிமா விமர்சகராக மாறிவிட்டார் இன்றைய பொம்மை முதல்வர் என்பதுதான் கவலை அளிக்கிறது. ஜெய்பீம் படம் பார்த்து உள்ளம் உலுக்கிப் போனவர், தன் ஆட்சியில் தொடர்கதையாக உள்ள அஜித்குமார் போன்ற லாக்கப் மரணங்களைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா?

ஜெய்பீம் முதல் கூலி, பைசன் வரை, சினிமாக்களைப் பார்க்க, ரசிக்க, கருத்து தெரிவிக்க தான் இன்றைய முதல்வருக்கு நேரம் இருக்கிறது. தென் தமிழகம் மழையில் மிதந்த போது, கூட்டணி பேச்சுவார்த்தைக்கு டெல்லி பறந்தவர் தானே நீங்கள்?. தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தின் போது கூலி திரைப்படம் பார்த்தவர் தானே நீங்கள்?.

அதே போலத் தான், இப்போதும் மழையால் நெல் முளைத்துப் போய், தாங்கள் உழைத்து பயிரிட்ட விவசாயிகளின் துயரங்கள் பற்றி கொஞ்சம் கூட யோசிக்காமல், பைசன் படம் பார்க்க மணிக்கணக்கில் நேரம் செலவழித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இதுவரை 31 உயிர்கள் பருவமழையால் இழந்திருக்க, மழை மற்றும் புயல் காலத்தில் மக்களைக் காப்பதற்கான உரிய நெறிமுறைகளை வகுப்பது பற்றி யோசிக்க நேரம் இருந்ததா?.

அது சரி, விவசாயிகளை, ஏழை எளிய மக்களைப் பார்க்க, அவர்களின் வேதனைகளைக் கேட்டறிய உங்களுக்கு நேரம் இருக்காது தான். விவசாயிகளின், மக்களின் கண்ணீரை உணராத இந்த குடும்ப மன்னராட்சியாளர்களுக்கு, மக்களாட்சியின் சக்தியை உணர்த்தப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை' எனத் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீ சத்ய சாய் பாபா நூற்றாண்டு விழா: சென்னையில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கம்

சென்னை, அக்.27-

ஸ்ரீசத்ய சாய்பாபா நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை, திருவனந்தபுரத்தில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

புட்டபர்த்தி ஸ்ரீசத்ய சாய்பாபா பிறந்த நாள் நூற்றாண்டு விழா நவ.23ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, பயணிகள் வசதிக்காக தெற்கு ரயில்வே சார்பில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

அதன் விவரம்: சென்னை சென்ட்ரலில் இருந்து நவ.19, 21 ஆகிய தேதிகளில் இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06091),



மறுநாள் மதியம் 2.15 மணிக்கு ஆந்திர மாநிலம் குண்டக்கல் சென்றடையும். மறுமார்க்கமாக, குண்டக்கலில் இருந்து நவ.20, 22 ஆகிய தேதிகளில் மாலை 5.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06092), மறுநாள் காலை 9.45 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்தடையும்.

அதேபோல, திருவனந்தபுரம் வடக்கு நிலையத்தில் இருந்து நவ.19, 21 ஆகிய தேதிகளில் மாலை 6.05 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06093), மறுநாள் காலை 11 மணிக்கு சத்யசாய் பிரசாந்தி நிலையத்தை சென்றடையும். மறுமார்க்கமாக, சத்யசாய் பிரசாந்தி நிலையத்தில் இருந்து நவ.20, 22 ஆகிய தேதிகளில் இரவு 9 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06094), மறுநாள் பிற்பகல் 3.55 மணிக்கு திருவனந்தபுரம் வடக்கு நிலையம் அடையும்.

இந்த சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு இன்று (அக்.26) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த அதிபர் தேர்தலில் நான் போட்டியிட வாய்ப்பு உள்ளது: கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், அக்.27-

அண்மையில் சர்வதேச ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்தார். அதில் இது குறித்து பேசியுள்ளார். கடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்டு ட்ரம்ப்பை எதிர்த்து கமலா ஹாரிஸ் போட்டியிட்டார். தேர்தலில் ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அப்போதைய அதிபர் ஜோ பைடன் பாதியில் விலகிய நிலையில் கமலா ஹாரிஸ் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது. இவர் தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவர்.

"நிச்சயம் எனது பேர பிள்ளைகள் வெள்ளை மாளிகையில் பெண் அதிபர் ஒருவர் பதவியில் இருப்பதை தங்கள் வாழ்நாளில் பார்ப்பார்கள் என நம்புகிறேன். அது நானாக கூட இருக்கலாம். அடுத்த அதிபர் தேர்தலில் நான் போட்டியிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. இருப்பினும் அது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. அரசியலில் எனக்கு எதிர்காலம் உள்ளதாக நம்புகிறேன்.

நான் கருத்து கணிப்புகளை கருத்தில் கொள்வது இல்லை. அப்படி இருந்திருந்தால் நான் தேர்தலில் போட்டியிட்டு இருக்க மாட்டேன், இங்கு அமர்ந்து பேசி இருக்கவும் மாட்டேன். தன் மீதான விமர்சனங்களை அதிபர் ட்ரம்ப்பால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை" என கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

# ஆசிய போட்டியில் தங்கம் வென்ற கபடி வீரர்கள்: தலா ரூ.25 லட்சம் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்!

சென்னை: அக்.27-

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக தலா ரூ.25 இலட்சத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'முதல்வர் ஸ்டாலின் முகாம் அலுவலகத்தில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோரை பாராட்டி, ஊக்கத்தொகையாக தலா 25 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக தமிழக முதல்வர் தலா 25 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை இன்றைய தினம் வழங்கினார்.

பஹ்ரைன் நாட்டின் ரிப்பா நகரில் அமைந்துள்ள ஈசா ஸ்போர்ட்ஸ் சிட்டியில் 19.10.2025 முதல் 23.10.2025 வரை நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் கபடி விளையாட்டு,




வரலாற்றில் முதன்முறையாக அறிமுகமானது. சுற்றுப்போட்டித் தொடராக (Round Robin) நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ஏழு நாடுகள் பங்கேற்றன. இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கு முன்பு ஏழு அணிகள் ரவுண்ட் ராபின் வடிவத்தில் போட்டியிட்டன. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகள் இரண்டிலும் அசத்தலான ஆட்டங்களுடன் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்த வெற்றியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு திறமையான கபடி வீரர்கள் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் (ஆண்கள் பிரிவு) மற்றும் சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த கார்த்திகா ரமேஷ் (பெண்கள் பிரிவு) ஆகியோர் இந்திய அணியின் வெற்றிக்குக் காரணமான முக்கிய வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த அபினேஷ் மோகன்தாஸ் என்பவர் 2019 முதல் 2025 வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (ஷிஞிகிஜி) தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேனியில் உள்ள விளையாட்டு விடுதியில் முறையான பயிற்சி பெற்று தனது திறனில் முன்னேற்றம் கண்டுள்ளார்.

சென்னை, கண்ணகி நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் கார்த்திகா ரமேஷ் என்பவர் தேசிய அளவிலான SGFI, Khelo India மற்றும் Federation Nationals உள்ளிட்ட போட்டிகளில் மொத்தம் 11 முறை தமிழ்நாட்டிற்காக விளையாடி, அதில் 8 பதக்கங்களை வென்ற சிறப்புடைய திறமையான விளையாட்டு வீராங்கனை ஆவார்.

மேலும், அவர் 5 முறை தமிழ்நாடு அணியின் அணித்தலைவராக (Captain) பொறுப்பேற்று அணியை வழிநடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவர் தொடர்ந்து வெளிப்படுத்திய விளையாட்டு திறமைக்காக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) உயரிய ஊக்கத் திட்டமான High Cash Incentive (HCI) திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளார். இளையோர் பெண்கள் இந்திய கபடி அணியின் துணை அணித்தலைவராக (Vice Captain) பணியாற்றி, இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்தும் சிறப்பான தலைமைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆசிய அரங்கில் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை அங்கீகரிக்கும் விதமாக, தமிழக முதல்வர் தலா ரூ.25,00,000/ (இருபத்தைந்து இலட்சம்) என மொத்தம் ரூ.50,00,000/ (ஐம்பது இலட்சம்) ஊக்கத் தொகை வழங்கினார். முதல்வரின் உத்தரவின்படி, ரூ.15,00,000/ உயரிய ஊக்கத்தொகை (HCI) மற்றும் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த தமிழ்நாட்டின் கபடி நட்சத்திரங்களின் சிறந்த சாதனையை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து கூடுதலாக ரூ.10,00,000/ வழங்கப்பட்டுள்ளது.

இந்த சாதனை தமிழ்நாடு ஒரு முன்னணி விளையாட்டு மாநிலமாக உருவெடுத்து வருவதற்கான உறுதியான சான்றாகும். விளையாட்டாளரை மையப்படுத்திய திட்டங்கள், அறிவியல் சார்ந்த பயிற்சி முறைகள் மற்றும் மேம்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம், இந்திய அளவிலான சாம்பியன்களை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேற்றப் பயணத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்நிகழ்வின்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற நம் கபடி வீரர்கள் கண்ணகி நகர் கார்த்திகா மற்றும் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோர் சென்னை திரும்பியதும், நேராக எனது இல்லத்துக்கு அழைத்துப் பாராட்டி, இருவருக்கும் தலா 25 லட்ச ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கினேன்.

கண்ணகி நகருக்கு நான் சென்றபோதெல்லாம் அங்கு வசிக்கும் மக்கள் என்னிடம் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தர உத்தரவிட்டிருந்ததை நினைவுகூர்ந்து, "உங்க ஏரியாவில் இப்ப பிரச்சினைகள் தீர்ந்திருக்கா?" என்று கார்த்திகாவிடம் கேட்டேன். கடந்த 4 ஆண்டுகளில் பெருமளவில் கண்ணகி நகர் முன்னேறியிருப்பதாகப் புன்னகையோடு சொன்னார்.

கார்த்திகா அவர்களும் அபினேஷ் அவர்களும் மேலும் சில உதவிகளையும் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அவற்றையும் நிறைவேற்றித் தருவோம்.

நேற்று நான் பைசன் காளமாடன்இல் கண்ட மணத்தி கணேசன் தொடங்கி, இன்று அபினேஷ், கார்த்திகா வரை எளிய பின்புலங்களில் இருந்து சாதிக்கும் ஒவ்வொரு வீரரின் வெற்றியிலும் சமூகநீதி மண்ணான தமிழ்நாடு பெருமை கொள்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.

## நெல்லின் ஈரப்பதத்தை அதிகரிக்க மத்திய குழுவிடம் விவசாயிகள் கோரிக்கை

திருச்சி, அக்.27-

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் வாளாடி திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் மத்திய உணவு துறை துணை இயக்குநர் ராஜ்கிஷோர் சஹி தலைமையிலான குழுவினர் இன்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் தமிழகத்தில் குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையால் நெல்லின் ஈரப்பதம் அதிகரித்து விட்டது. எனவே நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு அண்மையில் கடிதம் எழுதியிருந்தார்.

இதையடுத்து, தமிழகத்தில் நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்ய 3 மத்தியக்குழுக்களை மத்திய உணவுத்துறை அனுப்பி உள்ளது. காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு குழு



2 நாட்களாக ஆய்வுப் பணிகளை தொடங்கி நடத்தி வருகிறது. திருச்சி மற்றும் தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் ஆய்வு செய்ய திருச்சிக்கு வந்து தனியார் ஓட்டலில் தங்கியிருந்த 2 குழுக்கள் நேற்று முன்தினம் திடீரென நாமக்கல், கோவை பகுதியில் உள்ள செறிவூட்டப்பட்ட அரிசி தயாரிப்பு ஆலைகளில் ஆய்வு செய்ய சென்றனர். அக்குழுவினர் அக்.26 வரை ஆய்வு செய்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி திருச்சி, புதுக்கோட்டை, தேனி, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆய்வு செய்ய மத்திய உணவு துறை துணை இயக்குநர் ராஜ்கிஷோர் சஹி (ஆர்.கே. சஹி) தலைமையிலான குழுவினர் இன்று திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் வாளாடி திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

அப்போது அங்கிருந்த விவசாயிகள், 'மழையால் அறுவடைப் பணிகள் தாமதமாகி வருகிறது. அறுவடை செய்த நெல்லை காய வைக்க முடியவில்லை. எனவே நெல்லின் ஈரப்பதத்தை உயர்த்தித்தர வேண்டும்' என கோரிக்கை விடுத்தனர்.

மாந்துரையைச் சேர்ந்த விவசாயி பீட்டர் பவுல்ராஜ் கூறுகையில், "லால்குடி வட்டம் முழுவதும் மழையால் வயல்கள் அனைத்தும் மூழ்கி உள்ளன. தண்ணீரை வடிய வைக்க முடியவில்லை. நான் மைக்கேல்பட்டியில் 5 ஏக்கர் நெல் பயிரிட்டேன். மழையால் அறுவை பணிகள் பாதித்தது. இதனால் ஏக்கருக்கு 5 மூட்டை நெல் மட்டுமே அறுவடை செய்ய முடிந்தது. ஏக்கருக்கு 60 மூட்டை நெல் கிடைத்த நிலையில் தற்போது 5 மூட்டை மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம். எனவே ஈரப்பதத்தை அதிகரித்துத்தருவதோடு, மத்திய அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

அதைக்கேட்டுக் கொண்ட ஆய்வுக்குழுவினர் விவசாயிகளின் நெல் மாதிரிகள், கொள்முதல் நெல் மாதிரிகளை சேகரித்தனர். கருவிகள் கொண்டு நெல்லின் ஈரப்பதத்தை பரிசோதித்தனர். தொடர்ந்து நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் குழுவினர் ஆய்வு செய்தபோது, அங்கு போதிய இடவசதி இல்லை. கொள்முதல் நிலையத்தில் ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இதனால் நெல் அளவிடும் பணிகள் தாமதமாவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

அதை தொடர்ந்து ஆய்வுக் குழுவினர் பூவாளூர், கோமகுடி, கொப்பாவளி ஆகிய திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஆய்வு செய்து வருகின்றனர். ஆய்வின் போது, லால்குடி வருவாய் கோட்டாட்சியர் ஸ்ரீதர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக திருச்சி மண்டல மேலாளர் குமரவேல், வட்டாட்சியர் ஞானாமிர்தம் ஆகியோர் உடனிருந்தனர்.




# கனிமவள கொள்ளை தொடர்பாக சிபிஐ விசாரிக்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

கோவை, அக்.27-

கனிமவளக் கொள்ளை தொடர்பாக சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி கூறினார். கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: கனமழையால் டெல்டா மாவட்டங்களில் அறுவடையான நெல் முளைக்கத் தொடங்கியுள்ளது. அதேபோல, சம்பா பயிர்கள் மழையில் மூழ்கி நாசமாகி விட்டன. 6.5 லட்சம் ஏக்கர்குறுவை சாகுபடி நடைபெற்ற நிலையில், 18 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்திருக்க வேண்டும். ஆனால், 5.5 லட்சம் டன் மட்டுமே கொள்முதல் செய்துள்ளனர். நெல் ஈரப்பதம் அதிகமானதால் வாங்க மறுக்கின்றனர். விவசாயிகள் மீது அக்கறை இல்லாத திமுக அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

தென் மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் கனிம வளங்கள் கடத்தப்படுகின்றன. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த விவகாரத்தை சிபிஐ விசாரிக்க வேண்டும். இது தொடர்பாக நீதிமன்றதை நாடுவோம். நீதிமன்றம் அனுமதி அளித்தும் தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. அத்திக்கடவுஅவிநாசி திட்டத்தில் 20 சதவீத ஏரிகள் மட்டுமே பயனடைந்துள்ளன. இந்த திட்டத்தை மறுஆய்வு செய்ய வேண்டும்.

திமுக அரசுக்கு நீர் மேலாண்மை குறித்து எதுவும் தெரியவில்லை. தமிழக அரசு கொண்டு வந்துள்ள தனியார் பல்கலை. திருத்த சட்டம் தவறானது. இதை திரும்பப் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து, ராமதாஸ் குறித்து செய்தியாளர்கள் சில கேள்விகள் எழுப்பியபோது "அது எங்கள் உட்கட்சி விவகாரம்" என்று அன்புமணி பதில் அளித்தார்.

# கரூரில் 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் தவெக நிர்வாகிகள் மீது சிபிஐ வழக்கு பதிவு

கரூர், அக்.27-

கரூரில் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த வழக்கில் சிபிஐ தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் உள்ளிட்ட நிர்வாகிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.



கரூர் வேலுசாமிபுரத்தில் செப். 27ம் தேதி நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த வழக்கை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி சிபிஐ விசாரித்து வருகிறது. முன்னதாக, கடந்த 17ம் தேதி கரூர் வந்த சிபிஐ குழுவிடம், கரூர் டவுன் போலீஸார் மற்றும் ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் ஆவணங்களை ஒப்படைத்தனர்.

இதையடுத்து, சிபிஐ குழுவைச் சேர்ந்த ஆய்வாளர் மனோகரன், கரூர் குற்றவியல் நீதிமன்றம் 2ல் நீதிபதி சார்லஸ் ஆல்பர்ட் முன்னிலையில் முதல்தகவல் அறிக்கையை கடந்த 22ம் தேதி தாக்கல் செய்தார். அதில், கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச் செயலாளர் என் .ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல்குமார் மற்றும் தவெகவினர் பலர் என குறிப்பிட்டு, விசாரணையைத் தொடர உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கரூர் குற்றவியல் நீதிமன்றம் 1ல் சிபிஐ தாக்கல் செய்துள்ள எஃப்ஐஆரின் நகலைக் கேட்டு தவெக வழக்கறிஞர்கள் நேற்று மனு தாக்கல் செய்தனர். இதையடுத்து, சிபிஐ தாக்கல் செய்த எஃப்ஐஆரின் நகல் அவர்களிடம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்துமஸ் பண்டிகை, அரையாண்டு விடுமுறை: விரைவு ரயில்களில் டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பு

சென்னை, அக்.27-

டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ், அரையாண்டு தேர்வு விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊர் செல்பவர்கள் ரயில்களில் விறுவிறுப்பாக முன்பதிவு செய்து வருகின்றனர்.



கிறிஸ்துமஸ் பண்டிகை வரும் டிச.25ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதுபோல, பள்ளிகளில் அரையாண்டு தேர்வுகளும் முடிந்து விடுமுறை வருகிறது. இதற்கிடையே, 60 நாட்களுக்கு முன்பு ரயில்களில் முன்பதிவு செய்யும் வசதி இருப்பதால், டிச.23, 24ம் தேதிகளில் வெளியூர் செல்ல திட்டமிட்டுள்ளவர்கள் கடந்த 2 நாட்களாக முன்பதிவு செய்து வருகின்றனர்.

முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களில் கன்னியாகுமரி, நாகர்கோவில், நெல்லை, தூத்துக்குடி, செங்கோட்டை, பாண்டியன், மலைக்கோட்டை உள்ளிட்ட விரைவு ரயில்களில் தூங்கும் வசதி பெட்டிகளுக்கான முன்பதிவு முடிந்தது. இதன்பிறகு, அடுத்த 30 நிமிடங்களில் 'ஏசி' பெட்டிகளிலும் முன்பதிவு முடிந்து, காத்திருப்போர் பட்டியல் வந்தது.

இருப்பினும், வந்தே பாரத், தேஜஸ், வைகை, குருவாயூர் உள்ளிட்ட விரைவு ரயில்களில் மட்டும் கணிசமாக டிக்கெட்டுகள் இருந்தன. இதேபோல, கோவை தடத்தில் செல்லும் வந்தேபாரத் உள்ளிட்ட அதிவிரைவு ரயில்களிலும் கணிசமான டிக்கெட் இருந்தன.

# டாஸ்மாக் நிறுவனத்துக்கு காட்டிய அக்கறையை நெல் கொள்முதலில் காட்டவில்லை: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

தஞ்சாவூர், அக்.27-

தீபாவளி விற்பனை இலக்கை எட்ட டாஸ்மாக்கில் காட்டிய அக்கறையை நெல் கொள்முதலில் தமிழக அரசு காட்டவில்லை என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.



தஞ்சாவூர் அருகேயுள்ள ஆலக்குடி நெல் கொள்முதல் நிலையத்தை நேற்று பார்வையிட்ட நயினார் நாகேந்திரன், அங்கிருந்த விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: டெல்டா மாவட்டங்களில் நடப்பாண்டு 6.30 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டைவிட அதிகம் என்பது கடந்த ஜூன் மாதமே முதல்வர் கவனத்துக்குச் சென்றது. நெல் கொள்முதலுக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்துவிட்டோம் என முதல்வர் கூறினார். ஆனால், எந்த முன்னேற்பாட்டையும் செய்யவில்லை. இதனால், ஒவ்வொரு கொள்முதல்நிலையத்திலும் நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன.

ஆனால், கொள்முதல் தாமதத்துக்கு செறிவூட்டப்பட்ட அரிசிதான் காரணம் என மத்திய அரசு மீது தமிழக உணவுத் துறை அமைச்சர் பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். தேவையான நேரத்தில் கொள்முதல் நிலையங்களைத் திறக்காமல், உரிய நேரத்தில் கொள்முதல் செய்யாமல் தாமதப்படுத்தியது தமிழக அரசுதான். தமிழகத்தில் நெல் கொள்முதலில் ஏற்பட்ட குளறுபடிக்கு தமிழக அரசின் நிர்வாகத் திறமையின்மையே காரணம். இதற்கு முதல்வர் பொறுப்பேற்க வேண்டும். மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி ஆய்வு செய்த பிறகுதான், கொள்முதல் தாமதத்தால் நெல்மணிகள் முளைத்த விவரமே தமிழக அரசுக்கு தெரியவந்துள்ளது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அண்மையில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் ஆய்வுசெய்தார்.

ஆனால், மழையால் பாதிக்கப்பட்ட வயல்கள், கொள்முதல் நிலையங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள நெல்மணிகளைப் பார்வையிடவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டிஉள்ளனர். தற்போதும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழையால் பயிர்கள் மூழ்கியுள்ளன. தமிழக அரசு தீபாவளிக்கு டாஸ்மாக்கில் இலக்கு நிர்ணயித்து செயல்பட்டது. டாஸ்மாக்கில் காட்டிய அக்கறையை நெல்கொள்முதலில் தமிழக அரசு காட்டவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த ஜோதியின் ஜாமீன் மனு நிராகரிப்பு

சண்டிகர், அக்.27-

பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானுடன் தொடர்பில் இருப்பவர்களையும் மத்திய அரசு கண்காணித்து, கைது செய்து வந்தது.

அந்த வகையில், இந்திய ராணுவத் தகவல்களை பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததால், பஞ்சாப் மற்றும் ஹரியானாவைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 1.37 லட்சம் பின்தொடர்பவர்களைக் கொண்ட 33 வயதான ஹரியானாவைச் சேர்ந்த யூடியூபர் ஜோதி மல்ஹோத்ராவும் அடங்குவார்.

இந்நிலையில், ஹரியானா மாவட்டத்திலுள்ள நீதிமன்றத்தில் ஜாமீன் கேட்டு ஜோதி மல்ஹோத்ரா மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த கூடுதல் செஷன்ஸ் மாவட்ட நீதிபதி டாக்டர் பர்மிந்தர் கவுர், ஜோதி மல்ஹோத்ராவின் ஜாமீன் மனுவை நிராகரித்தார்.




# பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மனித உரிமை மீறல்கள்

புதுடெல்லி, அக்.27-

ஐ.நா. தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விவாதத்தில் இந்திய பிரதிநிதி பர்வதன்னேனி ஹரிஸ் நேற்று முன்தினம் பேசியதாவது:

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது. இங்கு இந்தியாவின் ஜனநாயக பாரம்பரியம் மற்றும் அரசியல்சாசன விதிகளின் படி மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை பின்பற்றுகின்றனர். பாகிஸ்தான் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள காஷ்மீரில் வசிக்கும் மக்கள் மிக கொடூரமான மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு ஆளாகின்றனர்.

அவர்கள் ராணுவ ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும், வளங்கள் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படுவதற்கும் வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதனால் அவர்கள் கொடூரமாக நடத்தப்படுகின்றனர். இங்கு நடைபெறும் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு பாகிஸ்தான் முடிவு கட்ட வேண்டும். இவ்வாறு ஹரிஸ் தெரிவித்தார்.

# நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை நிர்ணயிக்கும் பணி: செங்கை மாவட்டத்தில் மத்தியக் குழு ஆய்வு

செங்கல்பட்டு, அக்.27-

நெல் ஈரப்பதம் குறித்து ஆய்வு செய்வதற்காக தமிழகம் வந்த 3 மத்தியக் குழுவில், ஒரு குழு செங்கல்பட்டு மாவட்டத்தில் தங்களது ஆய்வுப் பணியை நேற்று தொடங்கியது. மற்ற குழுதங்களது பணிகளை இன்று அந்தந்த மாவட்டங்களில் தொடங் குவார்கள் எனத் தெரிகிறது.



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தியது. இதன் தொடர்ச்சியாக, தமிழகத்தில் ஆய்வுப் பணிகளைமேற்கொள்வதற்காக மத்திய உணவு துறையின் உயர் அதிகாரிகள் தலைமையில் தலா 3 குழுக்கள் அமைக்கப்பட்டன.

இதன்படி முதல் குழு நேற்று செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டது. இதில் உணவு பாதுகாப்புத் துறை உதவி இயக்குநர் ப்ரீத்தி தலைமையில் 2 தொழில்நுட்ப வல்லுநர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் திருக்கழுகுன்றம் வட்டம் கீரப்பாக்கம், திருப்போரூர் வட்டம் ஒரகடம், மதுராந்தகம் வட்டம் படாளம் மற்றும் எல்.என்.புரம், செங்கை வட்டம் வில்லியம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மாவட்ட ஆட்சியர் தி.சினேகா முன்னிலையில் ஆய்வு செய்தனர். இதில் நெல்லின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதை கண்டறிந்தனர்.இந்த ஆய்வின்போது வேளாண்மைத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆராய்ச்சி பணிகளில் விருது: நவ.14க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

**சென்னை, அக்.27–**

'சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆராய்ச்சிப் பணிகளில் சிறந்து விளங்கும் நபர்கள், நிறுவனங்களுக்கான சுற்றுச்சூழல் விருதுகளுக்கு நவ.14ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்' என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் சுற்றுச்சூழல் கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை கவுரவிக்கும் விதமாக, 2024ம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

அதன்படி சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள், கல்வியாளர்கள், தனி நபர்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி விருதுகள். சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் தனி நபர்களுக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருதுகள், சுற்றுச்சூழல் மேலாண்மையில் சிறந்து விளங்கும் நிறுவனங்களுக்காக சுற்றுச்சூழல் மேலாண்மை விருதுகள், சுற்றுச்சூழல் மேலாண்மைக்கு வித்திடும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்காக சிறந்த ஆராய்ச்சி கட்டுரைக்கான விருதுகள் என 4 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன. விருதுகளுடன் முதல் பரிசாக ரூ.50 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.30 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.20 ஆயிரமும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்களாகவும், 18 வயது நிரம்பியவர்களாகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பத்தில் 2024 ஜனவரி முதல் 2024 டிசம்பர் வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் 2024ல் வெளியாகி இருக்க வேண்டும். தகுதியான நபர்கள் http://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் நவ.14ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். இணைய வழி விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கூடுதல் விவரங்களுக்கு மீ ஸீ பீ ஷீ மீ @ ஸீ வீ நீ . வீஸீ என்ற மின்னஞ்சல் முகவரியையும், 04424336421 என்ற தொலைபேசி எண்ணையும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கம் மாயமான வழக்கில் கர்நாடக நகைக் கடையில் விற்கப்பட்ட 400 கிராம் தங்கம் பறிமுதல்

திருவனந்தபுரம், அக்.27-

சபரிமலையில் தங்கம் மாயமான விவகாரத்தில் கர்நாடகாவில் உள்ள ஒரு நகைக் கடையில் விற்கப்பட்ட 400 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் பத்தனம் திட்டா மாவட்டத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலில் உள்ள 2 துவார பாலகர் சிலைகள் மற்றும் அதன் பீடத்தின் மீதான தங்கத் தகடுகளுக்கு தங்க முலாம் பூசும் பணி கடந்த 2019ம் ஆண்டு உன்னி கிருஷ்ணன் போற்றியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த பணி முடிந்த நிலையில் 4 கிலோ தங்கம் மாயமானதாக புகார் எழுந்தது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த கேரள உயர் நீதிமன்றம், தங்கம் மாயமானது குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை (எஸ்ஐடி) அமைத்தது. இந்த வழக்கு தொடர்பாக, உன்னிகிருஷ்ணன் போற்றி மற்றும் திருவாங்கூர் தேவசம் போர்டு (டிடிபி) முன்னாள் நிர்வாக அதிகாரி முராரி பாபு ஆகியோரை எஸ்ஐடி அதிகாரிகள் கடந்த சில தினங்களுக்கு முன்பு கைது செய்தனர்.



கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப் படையில் பெங்களூரு, பெல்லாரி, ஹைதராபாத், சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு எஸ்ஐடி அதிகாரிகள் குழுவினர் விரைந்துள்ளனர். திருவனந்தபுரம் மற்றும் பெங்களூருவில் உள்ள உன்னி கிருஷ்ணன் போற்றியின் வீடு, பெல்லாரியில் உள்ள ஒரு நகைக் கடை உள்ளிட்ட பல இடங்களில் எஸ்ஐடி அதிகாரிகள் நேற்று ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர்.

இதில், பெல்லாரி நகைக் கடையிலிருந்து ஐயப்பன் கோயிலில் மாயமான தங்கத்தில் சுமார் 400 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் முதன்மை குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ள உன்னி கிருஷ்ணன் போற்றி தனது உதவியாளர் கோவர்தன் மூலம் அந்த நகைக் கடையில் விற்கப்பட்டது தெரியவந்துள்ளது. இதுபோல திருவனந்தபுரத்தில் உள்ள உன்னி கிருஷ்ணன் வீட்டில் இருந்து பல தங்க நாணயங்கள் மற்றும் ரூ.2 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

கோயில் புதுப்பித்தல் பணிகளில் ஈடுபட்ட தேவசம் வாரியத்தைச் சேர்ந்த மேலும் சில ஊழியர்களின் வாக்குமூலத்தையும் பதிவு செய்ய எஸ்ஐடி அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இந்த வழக்கில் மேலும் சிலர் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிகிறது.




# நெல் கொள்முதல் செய்யாமல் தெருவில் விட்டுவிடுவதே தமிழக அரசின் சாதனை: சீமான் கண்டனம்

கோவை, அக்.27-

தமிழக அரசு டாஸ்மாக் மதுபான பாட்டில்களை பத்திரமாக வைப்பதற்கு கிடங்குகள் அமைத்து அவற்றுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. நெல் கொள்முதல் செய்யாமல் தெருவில் விட்டுவிடுகிறது. இதுவே தமிழக அரசின் சாதனை என நம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: "ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலங்களில் நெல் முறையாக கொள்முதல் செய்யப்படாததால் மழையில் நனைந்து வீணாகிறது. தமிழக அரசு டாஸ்மாக் மதுபான பாட்டில்களை பத்திரமாக வைப்பதற்கு கிடங்குகள் அமைத்து அவற்றுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. ஆனால் நெல் கொள்முதல் செய்யாமல் தெருவில் விட்டு விடுகிறது. இதுவே தமிழக அரசின் சாதனை. தமிழகத்தில் விளைவித்த நெல்லை விடுத்து ஆந்திரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து ஏன் அரிசி, வெல்லம் வாங்குகின்றனர். ஒரு நாள் பட்டினி கிடந்து இறந்தால் தான் அனைத்தும் தெரியும்.

கரூரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை விஜய் சந்திப்பது அவரின் விருப்பம். தூத்துக்குடி துப்பாக்கி சூட்டின் போது அப்போதைய அரசு பொறுப்பேற்றதா, அல்லது உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம், அரசு பணி அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டதா. கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களுக்கு தான் நிவாரண தொகை வழங்கப்பட்டது.

கல்வி, மருத்துவம், தண்ணீர் ஆகிய மூன்றும் என்று விற்பனைக்கு வந்ததோ சந்தை பண்டமாக மாற்றப்பட்டதோ அது நாடல்ல சுடுகாடு. 'சிப்காட்' தொழிற்சாலைகள் அமைத்த பகுதிகளில் தண்ணீரை குடிக்க வேண்டாம் என்று அரசே கூறுகிறது. ஆனால் மீண்டும் அதற்காக நிலத்தை அரசுதான் பறித்து தொழிற்சாலை கட்டுகிறது.

பிறக்கும் குழந்தை புற்று நோயுடன் பிறப்பதற்கு தண்ணீர், உணவு, சுவாசிக்கும் காற்று ஆகியவை நஞ்சானது தான் காரணம். அதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவே தண்ணீர் மாநாடு நடத்த உள்ளேன். சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து திருமாவளவன் கூறிய கருத்தை வரவேற்கிறேன். ஒன்றரை கோடி வட இந்தியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுத்து விட்டால் தமிழ்நாடு இந்தி பேசும் மாநிலமாக மாறிவிடும்.

பிறகு அனைத்தும் பாஜக வாக்குகளாக மாறிவிடும். கோவையில் வானதி சீனிவாசன் பெற்ற 20,000 வாக்குகள் கூட வட இந்தியர்களின் வாக்குகள் தான். தமிழ்நாட்டை சேர்ந்தவர்களின் வாக்குகளை திமுகவினர் தான் பாதுகாக்க வேண்டும் என்று முதல்வர் கூறுவது, திமுகவினரிடம் இருந்து தான் நாட்டையே பாதுகாக்க வேண்டியுள்ளது" இவ்வாறு சீமான் தெரிவித்தார்.

# ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே 'மோந்தா' புயல் அக்.28ல் கரை கடக்கும்


■ நாகை துறைமுகத்தில் நேற்று முன்தினம் ஏற்றப்பட்டிருந்த 1ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு.

சென்னை, அக்.27-

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரப் புயலாக வலுப்பெற்று, ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே அக்.28ம் தேதி கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், ராணிப்பேட்டை மாவட்டங்கள், புதுச்சேரியில் கன மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயலுக்கு 'மோந்தா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே 970 கி.மீ. தூரத்திலும், ஆந்திர மாநிலம் காக்கிநாடாவுக்கு தென்கிழக்கே 990 கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டுள்ளது. இது, மேற்கு, வட மேற்கு திசையில் நகர்ந்து, நேற்று (அக்.26) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், இன்று (அக்.27) காலை, தென்மேற்கு, மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் புயலாகவும் வலுவடையும்.

பின்னர் வடமேற்கு திசையில் நகர்ந்து, 28ம் தேதி வாக்கில் தீவிரப் புயலாக வலுப்பெறக்கூடும். 110 கி.மீ. வேகத்தில் காற்று வீசும்தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆந்திர கடலோரப் பகுதிகளில் மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினம் இடையே காக்கிநாடாவுக்கு அருகே தீவிரப் புயலாக 28ம் தேதி மாலை அல்லது இரவில் கடக்கக்கூடும். அப்போது, மணிக்கு 90 100 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 110 கிமீ வேகத்திலும் பலத்த சூறைக்காற்று வீசக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இன்று முதல் அக்.31ம் தேதி வரை இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.இந்த புயலுக்கு 'மோந்தா' என்று பெயரிடப்பட்டு உள்ளது. இன்று சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், ராணிப்பேட்டை மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்யக்கூடும். நாளை சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்கள், புதுச்சேரியில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது. 28ம் தேதி திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் அக்.29 ம் தேதி வரை 35 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்து பகுதியில் 14 செ.மீ., நாலுமுக்கில் 13 செ.மீ., காக்காச்சியில் 11 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் பாலமோரில் 9 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் 9 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பில் 8 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் சுருளக்கோடு, மதுரை மாவட்டம் இடையப்பட்டி, மதுரை மாநகரம், தல்லாகுளத்தில் 7 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

முதல்வர் உத்தரவு: 'மோந்தா' புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள, தமிழகத்தில் எடுக்கப் பட்டுள்ள நடவடி க்கைகள் தொடர்பாக சென்னை எழிலகத்தில் உள்ள அவசரகால கட்டுப்பாடு மையத்தில் வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் நேற்று ஆய்வு செய்தார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு அக்.16 ம் தேதி தொடங்கியது. மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. வருவாய்த் துறையின் கணக்குப்படி, அக்டோபர் 1 முதல் 24ம் தேதி வரை 21.8 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

வங்கக்கடலில் உருவாக உள்ள 'மோந்தா' புயல், சென்னை அருகே வர வாய்ப்பு உள்ளது. அதன் தாக்கத்தால் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளது. எனவே, சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். கடலுக்குச் சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். புயலால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ள மாவட்டங்களில் நிவாரண மையங்களை அமைத்து, தேவையான உணவுப் பொருட்களையும் தயாராக வைத்திருக்க முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழைக் காலம் தொடங்குகிற அக்.1 முதல் 24ம் தேதி வரை 31 பேர் உயிரிழந்துள்ளனர். 485 கால்நடைகள், 20,475 கோழிகள் உயிரிழந்துள்ளன. 1,280 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. அவற்றுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்போது 2 நிவாரண முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. அங்கு 210 பேர் தங்கியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது, வருவாய் நிர்வாக ஆணையர் எம்.சாய்குமார், வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை செயலர் பி.அமுதா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




# அருப்புக்கோட்டையா... விருதுநகரா? பிளான் 'பி'யுடன் காத்திருக்கும் பிரேமலதா

விருதுநகர், அக்.27-

விருதுநகர் மாவட்டத்தில், அதிமுக கூட்டணி அமைந்தால் அருப்புக்கோட்டை தொகுதியிலும், திமுக கூட்டணி அமைந்தால் விருதுநகரிலும் போட்டியிடும் திட்டத்தில் இருக்கிறது தேமுதிக.

மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்தின் சொந்த மாவட்டம் விருதுநகர் என்பதால் இம்முறையும் மகன் விஜய பிரபாகரனை இந்த மாவட்டத்தில் ஒரு தொகுதியில் நிறுத்தும் ஆலோசனையில் இருக்கிறார் பிரேமலதா. கடந்த மக்களவைத் தேர்தலில் சுமார் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் விருதுநகரில் விஜய பிரபாகரனின் வெற்றி கைநழுவிப் போனது. அதனால், வரும் சட்டமன்றத் தேர்தலில் விருதுநகர் மாவட்டத்தில் விட்ட இடத்தைப் பிடிக்கும் திட்டத்துடன் இருக்கிறது தேமுதிக.

விஜயகாந்தின் சொந்த ஊரானராமானுஜபுரம் அருப்புக்கோட்டை தொகுதிக்குள் வருவதால் அருப்புக்கோட்டை தொகுதியை மகனுக்கான முதல் சாய்ஸாக வைத்திருக்கிறார் பிரேமலதா. ஆனால், அதிமுக கூட்டணி என்றால் மட்டுமே அருப்புக்கோட்டை இவர்களுக்கு சாத்தியமாகும். ஒருவேளை, திமுக கூட்டணியில் சேரவேண்டிய சூழல் வந்தால் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரனின் தொகுதியான அருப்புக் கோட்டையைக் தங்களுக்குக் கேட்கமுடியாது என்பதால் விருதுநகர் தொகுதியை பிரேமலதா பி பிளானாக வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள் தேமுதிக வட்டாரத்தில்.

இதனிடையே, சென்னை அரசியலில் இருந்து விருதுநகர் அரசியலுக்கு மீண்டும் திரும்பி இருக்கும் அதிமுக முன்னாள் அமைச்சர் மா.ஃபா பாண்டியராஜன் விருதுநகர் தொகுதிக்காக மெனக்கிட்டு வருகிறார். அவருக்கு விருதுநகர் கிடைத்துவிடக் கூடாது என்பதில் விடாப்பிடியாக இருக்கும் இன்னொரு முன்னாள் அமைச்சரான ராஜேந்திர பாலாஜி, சந்தடிச் சாக்கில் விருதுநகர் தொகுதியைக் கூட்டணிக் கட்சிகளுக்கு தள்ளிவிடும் தந்திரத்துடன் இருப்பதும் தேமுதிகவுக்கு சாதகமான அம்சமாகவே பார்க்கப்படுகிறது.



# சிக்கல் சிங்காரவேலவர் கோயிலில் கந்தசஷ்டி விழா தேரோட்டம் கோலாகலம்

நாகை, அக்.27-

நாகை சிக்கல் சிங்காரவேலவர் கோயிலில் கந்தசஷ்டி விழா தேரோட்டம் இன்று நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு முருகா... முருகா... கோஷத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். நாகை மாவட்டம் சிக்கலில் சிங்காரவேலவர் கோயில் உள்ளது. இது கிபி 4ம் நூற்றாண்டில் கோட்செங்க சோழனால் கட்டப்பட்ட மாடகோயிலாகும். கோயிலில் வெண்ணெய் பெருமான் நவநீதேஸ்வரராகவும், பார்வதி வேல்நெடுங்கண்ணியாகவும் அருள்பாலிக்கின்றனர். தனது தாயாரான சிக்கல் வேல்நெடுங்கண்ணியிடம் வேல் வாங்கி திருச்செந்தூரில் சூரனை முருகன் வதம் செய்ததாகவும், அந்த பாவம் தீர நாகை மாவட்டம் கீழ்வேளூர் அட்சயலிங்க சுவாமி கோயிலில் முருகன் சிவனை நோக்கி தவம் இருந்ததாகவும் ஐதீகம்.

இத்தகைய சிறப்பு பெற்ற சிக்கல் சிங்காரவேலவர் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் கந்த சஷ்டி விழா கோலாகலமாக நடைபெறும். அதன்படி இந்தாண்டு கந்தசஷ்டி விழா கணபதி ஹோமத்துடன் கடந்த 21ம் தேதி துவங்கியது. 22ம் தேதி தங்க மஞ்ச வாகனம், 23ம் தேதி பவள ஆட்டுகிடா வாகனம், 24ம் தேதி வெள்ளி மயில் வாகனம், 25ம் தேதி வெள்ளி ரிஷப வாகனத்தில் சுவாமி வீதியுலா நடந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வாக தேரோட்டம் இன்று காலை கோலாகலமாக நடந்தது. காலை 5 மணிக்கு சிங்காரவேலவர் (முருகன்) வள்ளி தெய்வானையுடன் தேரில் எழுந்தருளினர். காலை 7.30 மணிக்கு கீழவீதியில் உள்ள தேரடியில் இருந்து தேர் புறப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு முருகா முருகா என்று கோஷத்தோடு தேரை வடம் பிடித்து இழுத்தனர். தெர்தெற்கு வீதி, மேல வீதி, வடக்கு வீதி வழியாக கீழவீதி வந்து மீண்டும் தேரடிக்கு வந்தது.

இன்றிரவு வேல்நெடுங்கண்ணியிடம் (பார்வதி) சாமி வேல் வாங்கும் நிகழ்ச்சி நடக்கிறது. நாளை (27ம் தேதி) இரவு தங்க ஆட்டுகிடா வாகனத்தில் சிங்காரவேலவர் எழுந்தருளி சூரசம்ஹாரம் நடக்கிறது. 28ம் தேதி தெய்வானை திருக்கல்யாணம், 29ம் தேதி வள்ளி திருக்கல்யாணம் நடக்கிறது. 30ம் தேதி விடையாற்றி விழா நடக்கிறது. 31ம் தேதி யயதாஸ்தான பிரவேசத்துடன் விழா நிறைவு பெறுகிறது.



# சென்னை ஐஐடியில் புத்தொழில் அறிவியல் கண்காட்சி: கவனம் ஈர்த்த மாணவர்களின் ஆக்கங்கள்

சென்னை, அக்.27-

சென்னை ஐஐடியில் நடைபெற்ற மாணவர்களின் புத்தொழில் அறிவியல் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த புதுமையான தயாரிப்புகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.

சென்னை கிண்டியில் உள்ள ஐஐடியில் 'சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்போம்' என்ற தலைப்பில் மாணவர்களுக்கான புத்தொழில் மற்றும் அறிவியல் சார்ந்த சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையிலான கண்காட்சி நேற்று நடைபெற்றது. இதில், இந்தியா முழுவதும் இருந்து பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 38 தயாரிப்புகள் மற்றும் அறிவியல் சிந்தனைகள் மூலம் உருவாக்கப்பட்ட புதுமையான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இக்கண்காட்சியை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி தொடங்கி வைத்துப் பேசும்போது, "ஜீரோ கார்பன் வெளியேற்றம் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு மாணவர்களின் சிந்தனைகளை செயலாக்கும் வகையில் 2 வது ஆண்டாக இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. மாணவர்கள் எந்தத் துறையில் படித்தாலும் அவர்களுக்கான ஆர்வம் எங்கு இருக்கிறதோ அதை நோக்கித்தான் அவர்கள் சென்றுகொண்டிருப்பார்கள். பொறியியல் மாணவர்களை துறைவாரியாகப் பிரிக்காமல் இன்ஜினீயரிங் ஸ்கூல் என்ற வகையில் புதிய பாடமுறையை அறிமுகப்படுத்தினால் நன்றாக இருக்கும்" என்றார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "மாணவர்கள் தங்களின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் பல்வேறு தயாரிப்புகளை காட்சிப்படுத்தியுள்ளனர், இலையில் இருந்து பேப்பர் தயாரிப்பது, வாழைநாரில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குவது, மரத்திலிருந்து செயற்கையான பூக்களை உருவாக்குவது என பல்வேறு வகையான தயாரிப்புகள் இடம்பெற்றுள்ளன. பிளாஸ்டிக் மற்றும் வெப்பமயமாதலைத் தடுக்கும் வகையிலான தயாரிப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் சிந்தனைகளை புத்தாக்க தொழிலை (ஸ்டார்ட்அப்) நோக்கி கொண்டு செல்வதுதான் கண்காட்சியின் தலையாய நோக்கம். இந்த ஆண்டு 38 கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். சிறந்த 10 சிந்தனைகளுக்கு தலா ரூ.1 லட்சம் பரிசு வழங்கப்படும்" என்றார். இந்த கண்காட்சியில் இடம்பெற்றிருந்த மாணவர்களின் புதுமை யான தயாரிப்புகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

# தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட 66% கூடுதலாக பெய்துள்ளது: வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, அக்.27-

அக்.1 முதல் இன்று வரை பருவமழை இயல்பாக 136.3 மி.மீ. மழை பெய்யும் நிலையில் 2226.0 மி.மீ. மழை பெய்துள்ளது. சென்னையில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட 48% கூடுதலாக பெய்துள்ளது. அக்.1 முதல் இன்று வரை பருவமழை இயல்பாக 196.3 மி.மீ. மழை பெய்யும் நிலையில் 290.0 மி.மீ. மழை பெய்துள்ளது


■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர் பாபு அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க நகர் மண்டலத்தில் வார்டு 70, கபிலர் தெருவில், ரூபாய் 4.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




# காரைக்குடி செஞ்சை மாரியம்மன் கோயில் கும்பாபிஷேக திருவிழா

## அழகப்பா பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் அகாடமி வழங்கிய இன்னிசை மற்றும் நடன நிகழ்ச்சி மிக சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது

காரைக்குடி, அக்.27-

காரைக்குடி செஞ்சை மாரியம்மன் கோயில் கும்பாபிஷேக திருவிழாவின் தொடக்க நாளில், அழகப்பா பெர்ஃ பார்மிங் ஆர்ட்ஸ் அகாடமி வழங்கிய இன்னிசை மற்றும் நடன நிகழ்ச்சி மிக சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது. பொன் பாஸ்கர் மற்றும் அழகப்பா கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர் ராமநாதன் வைரவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, நிகழ்ச்சியை அலங்கரித்தார்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களை வாழ்த்தியதோடு மட்டுமல்லாமல், சுமார் இரண்டரை மணி நேரம் முழுவதும் நிகழ்ச்சியை கண்டு ரசித்தார்கள்.,இன்னிசை கச்சேரியில் பிரபல பாடகியரான டாக்டர் அ. கீதா மற்றும் க. நந்தினி அவர்கள் முன்னணி பாடகிகளாக இருந்தனர். அழகப்பா பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் அகாடமி, அழகப்பா பெண்கள் பள்ளி, மற்றும் அழகப்பா மாண்டிசோரி பள்ளி மாணவிகளின் அழகிய நடன நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன., இந்த நிகழ்ச்சிக்கு சிவானந்தம் தலைவராக இருந்தார். பெருளாளர் கேசவன் அவர்கள் இணைந்து, மாணவர்கள் மற்றும் இசைக் கலைஞர்களை பாராட்டி, சான்றிதழ்கள் மற்றும் பொன்னாடைகளை வழங்கி கௌரவித்தார்கள்.





# சிவகங்கையில் மாணவர்களின் தனித்திறன்களை வளர்க்கும் மாவட்டக் கலைத் திருவிழா

சிவகங்கை, அக்.27-

சிவகங்கையில் மாணவர்களின் தனித்திறன்களை வளர்க்கும் மாவட்டக் கலைத் திருவிழா தமிழ் நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை சார்பாக தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவில் கலைத்திருவிழா போட்டிகளை சிறப்பாக நடத்தி வருகின்றது. சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் இரண்டாவது நாளாக 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு நடைபெற்றது. இப்போட்டிகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இருந்து 800 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர். மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் மாநில



அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க உள்ளனர். முதன்மைக் கல்வி அலுவலர் மாரிமுத்து தலைமை வகித்து போட்டிகளைத் தொடங்கி வைத்தார். மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ மாவட்டக் கல்வி அலுவலர்கள் ராஜேந்திரன் செந்தில்குமரன் வடிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டத் திட்ட அலுவலக கூட்டரங்கில் நாட்டுப்புற நடனம் (தனி) பரதநாட்டியம் (தனி) வட்டார வளமைய கூட்டரங்கில் பிறவகை நடனம் பள்ளிக் கல்வித்துறை கூட்டரங்கில் பரதநாட்டியம் (குழு) நாட்டுப்புற நடனம் (குழு) புனித மைக்கேல் பதின்ம மேல்நிலைப்பள்ளியில் பறை நாதஸ்வரம் புல்லாங்குழல் கீ போர்டு பொம்மலாட்டம் தனிநபர் நடிப்பு பலகுரல் பேச்சு வீதி நாடகம் இலக்கிய நாடகம் புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கவின்கலை போட்டிகள் பானை ஓவியம் களிமண் சிற்பம் மணல் சிற்பம் காகிதக்கூழ் பொருட்கள் நாட்டுப்புறப் பாடல் செவ்வியல் இசை வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் மூன்று மையங்களில் சிறப்பாக நடுவர்களை கொண்டு நடத்தப்பட்டது. போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ சிறப்பாக செய்திருந்தார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தலைமையாசிரியர்கள் வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஆசிரிய பயிற்றுநர்கள் உள்ளிட்டோர் போட்டிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

# அமெரிக்கவாழ் இந்தியர்கள் தாயகம் வர வேண்டும்: சோஹோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு அழைப்பு

புதுடெல்லி, அக்.27-

அமெரிக்காவில் தற்காலிகமாக பணியாற்றுவோருக்கு வழங்கப்படும் எச்1பி விசா கட்டணம் அண்மையில் ரூ.88 லட்சமாக அதிகரிக்கப்பட்டது. விசா கட்டண உயர்வு உட்பட பல்வேறு வகைகளில் அமெரிக்க நிறுவனங்களில் இந்திய மென்பொறியாளர்கள் சேருவதை தடுக்க மறைமுகமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



சமீபத்திய புள்ளிவிவரத்தின்படி அமெரிக்காவின் சிலிகான் பள்ளத்தாக்கில் பணியாற்றும் தொழில்நுட்ப ஊழியர்களில் 25 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியினர் ஆவர். மேலும் அமெரிக்காவின் முன்னணி மென்பொருள் நிறுவனங்களுக்கு இந்தியர்களே தலைமை வகிக்கின்றனர்.

இதுகுறித்து அமெரிக்காவின் மன்ஹாட்டன் இன்ஸ்டிடியூட் அமைப்பின் ஆராய்ச்சியாளர் டேனியல் டி மார்டினோ வெளியிட்ட ஆய்வறிக்கையில், ''அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியினர் குறித்து சில முட்டாள்கள் எதிர்மறையாக கருத்துகளை கூறி வருகின்றனர். என்னுடைய ஆய்வின்படி இந்திய வம்சாவளியினரால் அமெரிக்காவுக்கு அதிக நன்மை கிடைத்திருக்கிறது'' என்றார்.

இந்த பதிவை சோஹோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதோடு வேம்பு வெளியிட்ட பதிவில், ''இந்திய வம்சாவளியினர் வசிக்கும் நாடுகளின் வளர்ச்சிக்காக, அவர்கள் அதிக நிதி பங்களிப்பை வழங்கி உள்ளனர். இது டேனியல் டி மார்டினோவின் ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் இந்திய வம்சாவளியினருக்கு ஓர் அழைப்பை விடுக்கிறேன். ஒரு நாடு உங்களை வரவேற்கவில்லை என்றால் அந்த நாட்டில் நீங்கள் ஏன் வாழ வேண்டும். பாரத மாதா உங்களை அழைக்கிறாள். உங்களை வரவேற்க ஆவலோடு காத்திருக்கிறாள். வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் தாயகத்துக்கு திரும்ப வேண்டும். நாம் ஒன்றிணைந்து மிக வலுவான, வளமான இந்தியாவை கட்டி எழுப்புவோம்'' என்றார்.

இந்த பதிவின் மூலம் அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் தாயகம் திரும்ப ஸ்ரீதர் வேம்பு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

# "மாணவியை தலைமை ஆசிரியர் தாக்கிய விவகாரத்தில் திமுக கவுன்சிலர் தலையீட்டால் நடவடிக்கை இல்லையா?" சீமான்

சென்னை, அக்.27-



மாநகராட்சி பள்ளியில் மாணவியைத் தாக்கிய தலைமை ஆசிரியர் விவகாரத்தில், திமுக கவுன்சிலர் தலையீட்டால் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லையா? என, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: "சென்னை புழுதிவாக்கம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் 5ம் வகுப்புப் படித்து வந்த 11 வயது மாணவி, வகுப்பறையில் பேனாவைத் திறந்தபோது மை கொட்டியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த தலைமை ஆசிரியை இந்திராகாந்தி, தரையைத் துடைக்கும் கட்டையால் சிறுமியை கடுமையாக தாக்கியுள்ளார். இதில் படுகாயமுற்ற சிறுமி தற்போது கிண்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

காவல்துறை பாகுபாடு: ஆனால் சிறுமியை பாதிப்புக்கு உள்ளாக்கிய தலைமை ஆசிரியை மீது தமிழக காவல்துறை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்பகுதியைச் சேர்ந்த திமுக கவுன்சிலரின் தலையீடு காரணமாகவே தலைமை ஆசிரியை மீதும் நடவடிக்கை எடுக்க காவல்துறை தயங்குகிறதா? அல்லது பாதிக்கப்பட்ட சிறுமி ஆதித் தமிழ்க்குடி என்பதால் நடவடிக்கை எடுப்பதில் பாகுபாடு காட்டுகிறதா?

எனவே சிறுமியை மிருகத்தனமாகத் தாக்கிய அரசுப்பள்ளி தலைமை ஆசிரியை மீது காவல்துறை உடனடியாக வழக்கு பதிந்து கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# ரூ.34 ஆயிரம் கோடி முதலீட்டில் வெளியாட்களின் தலையீடு இல்லை: வாஷிங்டன் போஸ்ட் குற்றச்சாட்டுக்கு எல்ஐசி மறுப்பு

புதுடெல்லி, அக்.27-

முதலீடு தொடர்பான முடிவில் வெளியாட்களின் தலையீடு இருப்பதாக 'தி வாஷிங்டன் போஸ்ட்' கட்டுரை வெளியிட்டிருப்பது அடிப்படை ஆதாரமற்றது என எல்ஐசி மறுப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'தி வாஷிங்டன் போஸ்ட்' ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. அதில், "கடந்த மே மாதத்தில் எல்ஐசி நிறுவனம் அதானி குழும நிறுவனத்தில் சுமார் ரூ.34 ஆயிரம் கோடி முதலீடு செய்தது.

இதில் வெளியாட்களின் தலையீடு உள்ளது. இது தொடர்பான திட்டத்தை இந்திய அரசின் உயர் அதிகாரிகள் விரைவுபடுத்தி உள்ளனர்'' என கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக எல்ஐசி நேற்று வெளியிட்ட மறுப்பு அறிக்கையில் கூறியிருப்பதாவது: எல்ஐசியின் முதலீடு தொடர்பான முடிவுகளில் வெளிப்புற காரணிகள் தலையிட்டதாக தி வாஷிங்டன் போஸ்ட் கட்டுரை வெளியிட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு தவறானது, ஆதாரமற்றது மற்றும் உண்மைக்கு முற்றிலும் மாறானது. அந்தக் கட்டுரையில் கூறியிருப்பது போல, அதானி குழும நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான எந்த ஆவணமோ அல்லது திட்டமோ எல்ஐசியால் இதுவரை தயாரிக்கப்படவில்லை.




மத்திய அரசின் நிதி சேவைகள் துறை அல்லது வேறு எந்த அமைப்புக்கும் இத்தகைய முடிவுகளில் எந்தப் பங்கும் இல்லை. எல்ஐசி தனது அனைத்து முதலீட்டு முடிவுகளிலும் மிக உயர்ந்த அளவிலான கவனத்தையும் பொறுப்பையும் கடைபிடித்துள்ளது. அனைத்து முடிவுகளும் நடைமுறையில் உள்ள கொள்கைகள், சட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப, அனைத்து தரப்பினரின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ளன. எல்ஐசியின் புகழுக்கும் இந்தியாவின் வலுவான நிதித் துறை அடித்தளத்துக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த கட்டுரை வெளியிடப்பட்டுள்ளதாக தோன்றுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 2025-26ம் நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 6.6 சதவீதம் வளரும்: சர்வதேச நிதியம் வெளியிட்ட அறிக்கையில் தகவல்

புதுடெல்லி, அக்.27-

இந்திய பொருளாதாரம் இந்த நிதியாண்டில் 6.6 சதவீதம் வளர்ச்சி அடையும் என சர்வதேச நிதியம் கணித்துள்ளது.

உலகின் பல நாடுகளுக்கு அமெரிக்கா வரிகளை உயர்த்தியது. சில நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்தது. இதனால் உலகளவில் நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கும் சூழலில், உலக பொருளாதார முன்னோட்டம் குறித்த அறிக்கையை, சர்வதேச நிதியம் (ஐஎம்எப்) வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: 202526ம் நிதியாண்டில் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா தொடர்ந்து இருக்கும். இதன் பொருளாதாரம் 6.6 என்ற வீதத்தில் வளர்ந்து வருகிறது. முதல் காலாண்டில் பொருளாதாரத்தில் சிறப்பான செயல்பாடு காரணமாக இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்த வரிவிதிப்பின் பாதிப்புகளை ஈடு செய்துள்ளது.



சீனாவின் பொருளாதார வளர்ச்சி 4.8 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்ட வேகம் சற்று குறைவதற்கான சாத்தியங்கள் உள்ளதால் 2026ம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.2 சதவீதமாக இருக்கும். அமெரிக்காவின் வரி பாதிப்புகள் எதிர்பார்த்ததை விட குறைவாக உள்ளது. இந்த நிதியாண்டில் உலகளவிலான பொருளாதார வளர்ச்சி 3.2 சதவீதமாக இருக்கும். இது அடுத்த நிதியாண்டில் 3.1 சதவீதமாக குறையும். உலகளவில் பணவீக்கம் தொடர்ந்து குறையும். வளர்ந்த பொருளாதார நாடுகளில் வளர்ச்சி வீதம் 1.6 சதவீதமாக இருக்கும். வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் வளர்ச்சி 4.2 சதவீதமாக இருக்கும். இது அடுத்த நிதியாண்டில் 0.2 சதவீதம் குறையலாம்.

வளர்ந்த பொருளாதார நாடுகளில் வேகமாக வளரும் நாடாக ஸ்பெயின் இருக்கும். இதன் வளர்ச்சி வீதம் 2.9 சதவீதமாக இருக்கும். அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி 1.9 சதவீதமாக இருக்கும். இது கடந்தாண்டில் 2.4 சதவீதமாக இருந்தது. பிரேசில் நாட்டின் வளர்ச்சி வீதம் 2.4 சதவீதமாகவும், கனடாவின் வளர்ச்சி 1.2 சதவீதமாகவும், ஜப்பானின் வளர்ச்சி 1.1 சதவீதமாகவும் இருக்கும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகமாக இருந்தாலும், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி அடுத்த நிதியாண்டில் 3.3 சதவீதத்திலிருந்து, அடுத்தாண்டு 2.6 சதவீதமாக குறையும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் மருத்துவர் தற்கொலை வழக்கில் எம்.பி.க்கு தொடர்பு: 4 பக்க கடிதத்தை கைப்பற்றி போலீஸார் விசாரணை

மும்பை, அப்.27-

பெண் மருத்துவர் தற்கொலை வழக்கில் மகாராஷ்டிர எம்.பி. ஒருவருக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் பெண் மருத்துவர் எழுதியுள்ள 4 பக்க கடிதத்தையும் போலீஸார் கைப்பற்றி விசாரிக்கின்றனர்.



மகாராஷ்டிரா மாநிலம் பீட் மாவட்டத்தை சேர்ந்த பெண் மருத்துவர் ஒருவர் சதாரா மாவட்டம் பால்டன் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் பணியாற்றி வந்தார். 3 நாட்களுக்கு முன்பு பெண் மருத்துவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தனது மரணத்துக்கு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கோபால் பதானே காரணம் எனவும், அவர் 4 முறை தன்னை பாலியல் வன்கொடுமை செய்தார் எனவும் தனது உள்ளங்கையில் குறிப்பு எழுதியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் நேற்று சதாரா மாவட்ட போலீஸ் எஸ்.பி. தோஷி கூறியதாவது: பால்டன் தாலுகாவில் பெண் மருத்துவர் தற்கொலை செய்து கொண்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 2 பேரில் வீட்டு உரிமையாளர் பிரசாந்த் பங்கரை கைது செய்துள்ளோம். சப் இன்ஸ்பெக்டர் கோபால் பதானேவை தேடி வருகிறோம்.

தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னதாக பிரசாந்த் பங்கருக்கு, பெண் மருத்துவர் செல்போனில் குறுஞ் செய்தி அனுப்பியுள்ளார். அதுமட்டுமல்லாமல் அவர் 4 பக்க தற்கொலைக் கடிதத்தையும் எழுதி வைத்துள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கில் போலீஸார் நடத்திய விசாரணையில் முக்கிய உண்மைகள் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக மேலும் 4 பக்க தற்கொலைக் குறிப்பை போலீஸார் கண்டறிந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

அதில், காவல் துறையில் குற்றவாளிகளுக்கு போலியான உடற்தகுதி சான்றிதழ் கொடுக்க தன்னை கட்டாயப்படுத்தினர். மேலும் ஒரு வழக்கில் ஒரு எம்.பி.யின் 2 உதவியாளர்கள் வந்து தன்னை மிரட்டியதாகவும் கடிதத்தில் கூறியுள்ளார்.

எம்.பி.க்கு போன் செய்து அவரிடம் பேச வைத்தனர் என்றும் அந்த எம்.பி. மறைமுகமாக தன்னை மிரட்டியதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் எம்.பி.யின் பெயரை போலீஸார் இதுவரை வெளியிடவில்லை.

மேலும், உதவி ஆய்வாளர் கோபால் பதானே, பெண் மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்தததையும் உறுதி செய்துள்ளனர். தற்கொலை செய்து கொண்ட பெண் மருத்துவர், கடந்த ஜூன் 19ம் தேதி பால்டன் துணை காவல் கண்காணிப்பாளரை (டிஎஸ்பி) சந்தித்து, 3 போலீஸ் அதிகாரிகள் மீது புகார் அளித்திருந்தார்.

மேலும், இந்த விவகாரத்தில் எம்.பி. ஒருவருக்கு தொடர்பு உள்ளதாகவும் அப்போதே புகார்கள் எழுந்தன. தான் அதிக மன அழுத்தத்தில் இருப்பதாகவும், இந்த விஷயத்தை தீவிரமாக விசாரித்து, அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் அவர் கோரியிருந்தார். ஆனால் இந்த விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

தற்கொலைக் குறிப்பில் உள்ள எம்.பி. யார் என்பது தொடர்பாக தற்போது போலீஸார் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161